20th August 1960]

Vanduvancheri Bridge—The work could not be started due to a dispute in site in question. The site has since been fixed. The work will be taken up for execution as soon as the detailed plan and estimates which are under scrutiny are technically sanctioned.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது கள்ளிமேடு, வாண்டு வாஞ்சேரி கோஸ்டல் ரோட்டில் பாலங்கள் நிறுவுவதற்கு நிச்சயமாகி விட்டதா? அதற்கு பிளான், எஸ்டிமேட் தயாராகி விட்டதா? அப்படியானுல் டென்டர்கள் 'கால்பார்' செய்து விட்டார்களா? வேலே எப்பொழுது துவங்கப்படும்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : எஸ்டிமேட் 70 ஆயிரம் ரூபாய் என்று இருக்கிறது. அதற்கு டெக்னிகல் சாங்ஷன் வந்த பிறகு வேலே துவக்கப்படும்.

Loans to agriculturists

* 340 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த சர்க்கார் கடன் பாக்கியை 1368, 1369-ம் பசலிகளுக்கு வற்புறுத்தி வசூலிப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியாயின் இதுவரை எத்தனே ஜப்திகள் செய்யப் பட்டன?

(இ) ஒரு பசலி பாக்கியை மட்டும் வசூலிக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (ஆ) No representation has so far been received by the Government. Out of 11,761 cases in which No. 1 Notice was issued for fasli 1368, only in 212 cases attachment was made. For fasli 1369, out of 33,351 cases, attachment was made in 331 cases only.

(இ) No, Sir.

SRI S. M. ANNAMALAI : இதற்கு முன்னுல் தக்காவி கடன் மான்னுயல் பிரகாரம் ஒரு பசலிக்கு கிஸ்தி கொடுக்கமுடியாமல் ஒத்திப்போட்டுவிட்டு, ஐந்து வருஷத்திற்குப் பிறகு வசூலிக்க வேண்டுமென்று இருந்தது. சர்க்கார் இப்பொழுது அதைத் திருத்தியிருக்கிறுர்கள். ஒருவர் ஒரு பசலிக்குக் கொடுக்க வேண்டிய கிஸ்தி ஒத்திப்போட்டுவிட்டால் அதை அடுத்த வருஷத்தில் வசூலிக்கிறுர்களா? அவ்வாறல்லாமல் முன் இருந்த மாதிரி செய்வதற்கு அரசாங்கம் யோசனே செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தமாதிரி கடன் கொடுத்து வசூல் செய்வதிலே பருவமழை இல்லாவிட்டால் அப்பொழுது வசூல் செய்ய முடிவதில்லை. அப்பொழுது ஒத்திப் போடப்படுகிறது. இம்மாதிரி ஒத்திப் போடுவதால் சில

இடங்களில் மூன்று நான்கு வருஷங்கள் பாக்கிகள் நின்று விடுகின்றன. ஆகையால் இப்பொழுது நடைமுறை வருஷத்திற்கும், பழைய பாக்கியில் ஒரு பகுதியையும் சேர்த்து வசூல் செய்கிறார்கள்.

Women teachers

* 341 Q.—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே 1 முதல் 3-ஆம் வகுப்பு வரைக்கும் பெண்களையே ஆசிரியைகளாக நியமிக்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) அப்படியாயின் எத்தனை உபாத்தியாயினிகள் தற்போது அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) There is no proposal to appoint only women as teachers for standards I to III in elementary schools.

(ஆ) Does not arise.

SRI P. G. MANICKAM: வொயிட் பேப்பரை ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்ட சட்டசபைக் குழுவினர் இவ்வாறு ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரை பெண்களை ஆசிரியர்களாகப் போடுவது நல்லது என்று சர்க்காருக்கு தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிச் செய்தால், குழந்தைகளின் நடவடிக்கைகளை அறிந்து பெண்கள் வேலை செய்வார்களாதலால், இதனால் படிப்பின் தரமும் அதிகரிக்கும். ஆதலால் இதுபற்றி சர்க்கார் மீண்டும் கவனம் செலுத்துமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கூடிய வரையில் பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

Statute of V. O. Chidambaram Pillai

* 343 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையில் வ. உ. சிதம்பரனார் சிலை வைக்க உத்தேசம் உண்டா?

(ஆ) மேலும் என்னென்ன சிலைகள் வைக்க திட்டம் உள்ளது?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b) No, Sir.

SRI S. M. ANNAMALAI: நமது தமிழ்நாட்டில் கப்பல் ஓட்டிய தமிழரின் பெயர் நிலைத்திருக்க வேண்டியாவது இந்த சர்க்கார் மறு பரிசீலனை செய்து சிதம்பரனார் அவர்களின் சிலையை கடற்கரையில் வைக்க முன்வருவார்களா?